# தேவாலய நெருப்பு

-----------------------------------------------

வான்கோவின் ஓவியத்தில் வான் நோக்கி வளரும்
சைப்ரஸ் மரங்களைப் போல்
கொழுந்து விட்டெரிகிறது ரோத்தர்தாம் தேவாலயம்.
ஓக் மர கோபுரம் நெருப்பில் எரிந்துச் சரிகையில்
அதில் கூடு கட்டிய பருந்துகள்
நெருப்புச் சுவாலையில் வட்டமிடுகின்றன வானில்.
நெருப்பில் செத்த பூச்சிகளையும் எலிகளையும்,
பசியாற உண்பதற்காய்க் கூடுகின்றன அண்டங்காக்கைகள்.
புனித மனிதர்களின் பளிங்கு முகங்களும்
பசுமை படர்ந்த செம்புச் சிலைகளும்
புகை மண்டலத்தினூடாகவும் புன்னகைக்க மறந்திலர்.
என் உள்ளங்கை ரொட்டித் துகள்களுக்காக
கையில் வந்து அமர்ந்த சிட்டுக் குருவிகள்
நெருப்பில் பறந்து போயின
தொலை தூர புதர்களை நோக்கி.
பறவைகளுக்குத் தெரிவதில்லை
நோத்தர்தாம் தேவாலயமும் ஒருநாள்
தீப்பற்றி எரியும் என்று.

15 , ஏப்ரல் , 2019ல் பாரீஸ் நகரின் நோத்தர்தாம் தேவாலயம் தீக்கிரையானபோது எழுதியது.

